சுருக்கம்

கல்லூரிக் கல்வி – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – சென்னை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ந. விக்னேஷ், என்பவரது பணியினை வரன்முறை செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

உயர்கல்வி (ஜி2) துறை

அரசாணை (3ப) எண்.34

நாள் 16.10.2023
சோபகிருது வருடம், புரட்டாசி –29.
திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டவை:–

1. மனிதவள மேலாண்மைத் துறை அ.சா.கு. எண்.37495/ ஜி1/2021–1, நாள் 03.12.2021.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.4732/பி1/ 2023, நாள் 30.05.2023.
3. மனிதவள மேலாண்மைத் துறை க.எண்.3248/A2/ 2023–1, நாள் 07.09.2023.

*****

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் விருத்தாச்சலம், திரு.கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் சிறப்பு நிலை தட்டச்சராக பணிபுரிந்து பணியிலிருக்கும் போது 22.05.2019 அன்று இயற்கையெய்திய திரு.ச.நடராஜன் என்பவரது வாரிசுதாரர் திரு.ந.விக்னேஷ் என்பவருக்கு கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, 19.08.2021 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார் என்றும், அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016–ல், 01.02.2016–க்கு முன்னர் கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளர் / தட்டச்சர்களின் பணியினை நியமன அதிகாரிகளால் வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டது என்றும், திரு.ந.விக்னேஷ் என்பவர் மேற்காணும்

அரசாணையில் தெரிவித்துள்ள தேதியான 01.02.2016-க்குப் பின்னர் 19.08.2021 முற்பகல் அன்று கருணையடிப்படையில் பணியில் சேர்ந்துள்ளதால் அன்னாரது பணியானது துறைத் தலைவரால் வரன்முறை செய்யப்படவில்லை என்றும், தனியர் எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவரது பிறந்த தேதி 19.09.1994 என்றும், இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத் தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயது வரம்பினை நிறைவு செய்துள்ளதாலும் அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயது வரம்பிற்கோ விதித் தளர்வாணைகள் பெற வேண்டிய நிலை எழவில்லை எனத் தெரிவித்து, அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை 19.08.2021 முற்பகல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அ.சா.கு-ன் படி அரசு கவனமுடன் ஆய்வு செய்து, விருதாச்சலம், திரு.கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் சிறப்பு நிலை தட்டச்சராக பணிபுரிந்து பணியிலிருக்கும் போது 22.05.2019 அன்று இயற்கையெய்திய திரு.ச.நடராஜன் என்பவரது வாரிசுதாரர் திரு.ந.விக்னேஷ் என்பவரை கல்லூரிக் கல்வித் துறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில், அவர் பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 19.08.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு, முன்தேதியிட்டு அவரது பணி வரன்முறைபடுத்தப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவையிருப்பின் விதிகளின்படி அவைகளைப் பெறத் தகுதியுடையவராகிறார்.

3. மனிதவள மேலாண்மைத் துறையின் க.எண். 3248/A2/2023-1, நாள் 07.09.2023-ல் உள்ள அறிவுரைகளின்படி அத்துறையின் இசைவினை பெறத் தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்

அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

கல்லூரிக்கல்வி இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை -15.

திரு.ந. விக்னேஷ், இளநிலை உதவியாளர், கல்லூரிக்கல்வி இயக்குநரகம், சென்னை -15. (கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)

நகல்

அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை, சென்னை-9.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு / மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இகோ/உதிரி

சுத்த நகல் கோப்பிற்கு (e-4886452/ஜி2/2023)

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

ஒ: சுதா

பிரிவு அலுவலர்

ந.க. எண். 43018/அ4/2023, நாள்: 9.11.2023

அசல் தகவலுக்காக வழங்கலாகிறது.

பெறுநர்

சார்ந்த பணியாளர்

நேர்முக உதவி அலுவலர்
கல்லூரிக் கல்வி இயக்ககம்
சென்னை-600 0